# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 9 செவ்வாய்க்கிழமை (26-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 286


# படைமுகாம் மீது புலிகள் ஷெல் வீச்சு!

# ஏழு இராணுவத்தினர் உயிரிழப்பு!!

## மட்டக்களப்பில் நேற்று மாலை சம்பவம்

மட்டக்களப்பு, ஒக்.26

மட்டக்களப்பு மாவட்டம் மிராகொட இராணுவ முகாம் மீது நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதல் காரணமாக ஏழு இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

பிற்பகல் 5-30 மணி முதல் 6-30 மணி வரை விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக இராணுவ முகாம்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

புலிகளின் தாக்குதலை அடுத்து இராணுவத்தினரும் பதிலுக்குப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் மிராகொட கிராமப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் 4 வயதுக் குழந்தை உட்பட 4 பேர் காயமடைந்தனர் என ஒரு தகவல் தெரிவித்தது.

(ஐ-7-21)

# புலிகளின் இணக்கமின்றி குமார் போட்டியிடமாட்டார்!

## காங்கிரஸ் செயற்குழு நேற்றுக் கூடியது

கொழும்பு, ஒக்ரோபர் 26

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பு நிலைப்பாடு என்ன என்பது தெரியவந்த பின்னரே தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி முடிவெடுக்கும் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று மாலை அக்கட்சியின் செயற்குழு, தலைவர் குமார் பொன்னம்பலம் தலைமையில் கூடி ஆராய்ந்தது. எனினும் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான எந்த முடிவும் அதில் எடுக்கப்படவில்லை.

''தமிழ் ஈழவரின் விருப்பு வெறுப்பை அறிந்து கொள்ளாமல் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதில்லை'' என்று அகில இலங்கைத் தமிழ்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பொது வேட்பாளரை ரெலோ ஆதரிக்கும்

வவுனியா, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அவரை ரெலோ ஆதரிக்கும்; இல்லையேல் ரெலோ தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்தும்.

இவ்வாறு வவுனியாவில் நேற்று நடைபெற்ற ரெலோ அமைப்பின் விசேட கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி கூட்டத்தில் ரெலோ அமைப்பின் சார்பில் அதன் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விரைவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

இதற்காக ரெலோ அமைப்பு சகல அமைப்புக்களுடனும் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தத் தயாராக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரை ஏற்றிச்சென்ற பஸ் கிளைமோரில் சிக்கியது!

### உயிலங்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஒக். 26

விடுமுறையில் சென்ற படையினரை ஏற்றிக் கொண்டு மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று உயிலங்குளம் நொச்சிக்குடாப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் சிக்கியது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; 11 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் அனைவரும் உடனடியாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான பஸ்ஸில் 22 இராணுவத்தினர் பயணம் செய்தனர். எனத் தெரிவிக்கப்பட்டது

(ஐ-7-21-150-4)

## வாசுதேவ நாணயக்கார சுயேச்சையாக போட்டி!

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று அறிவித்தார்.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய தேசிய விடுதலை முன்னணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக அக்கட்சியின் தலைவர் சூரியவன்ச திசநாயக்கா போட்டியிட உள்ளார்.

இவர்கள் இருவருடனும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரிலும் அளவெட்டியிலும் இளைஞர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஒக் 26

அளவெட்டி மற்றும் யாழ். நகரப் பகுதிகளில் நான்கு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி கிழக்கில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை நடத்திய படையினர் இராசமணி பவானந்தன் (வயது 28), கந்தராசா உதயசூரியன் (வயது 21) ஆகிய இரு இளைஞர்களைக் கைது செய்தனர். இக்கைதுகள் தொடர்பாக அவர்களது உறவினர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

யாழ். ஸ்ரான்லி வீதியைச சேர்ந்த மார்க்கண்டு கிருஷாந்தன் (வயது 21), பருத்தித்துறை வீதி வீரமாகாளி

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நாடு முழுவதும் டாக்டர்கள் நாளை வேலை நிறுத்தம்

கொழும்பு, ஒக். 26

நாடு முழுவதும் உள்ள மருத்துவர்கள் நாளை புதன் கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கில் பணிபுரியும் சுமார் ஆயிரத்து 500 மருத்துவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதனையும் சுகாதார அமைச்சு செய்வதில்லை.

தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணம் செல்வதற்கு தமக்கு இலவச விமானப்பயணச்சேவை வழங்கவேண்டும்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக மாணவன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவனான செல்வநாயகம் செல்வேந்திரன் நேற்று யாழ். இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மற்றொரு நபர் கொடுத்த தகவலின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார் என்றும்—

அதன் பின்னர் பிறவுண் வீதியில் உள்ள தமது இல்லத்தில் இருந்து மூன்று கிரனேற்றுக்களை அவர் எடுத்துத் தந்தார் என்றும்—

யாழ்.இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## 4 பொது மக்கள் ஷெல் வீச்சில் காயம்

வவுனியா, ஒக். 26

மன்னார் — பாலம்பிட்டி பகுதி மீது நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினால் 4 பொது மக்கள் படுகாயமடைந்ததாக வன்னியில் இருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் முதியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் பெயர் விவரங்கள் தெரியவரவில்லை

(ஐ-7-4)

## கொழும்பில் 25 தமிழர்கள் நேற்றுக் கைது

கொழும்பு, ஒக். 26

கொட்டாஞ்சேனை ஆமர் வீதிப் பகுதியில் நேற்று மாலை திடீர் சோதனை நடத்திய பொலீஸார் 25 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் கைதுசெய்யப்படுவதைக்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பு, ஒக். 26

அம்பாறை மாவட்டம் — செவனகல பகுதியில் நேற்று முன்தினமிரவு இரண்டு மின்மாற்றிகள் இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

மின்மாற்றி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து செவனகலப்பகுதியைச் சேர்ந்த பல கிராமங்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-6-150)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 26

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் 2 ஆம் லெப்டினன்ட் புரட்சிமாறன் (ஆனந்தன் டினேஸ் — யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-7-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ராஜா
யாழ்ப்பாணம்

கார்த்திக் - நக்மா
மற்றும் பலர் நடித்த

**மேட்டுக்குடி**

10-30, 2-30

(சி/9346)



**லிபேட்டி** அச்சுவேலி.
விஜயகாந்த் - பானுப்பிரியா
நடித்த

**பரதன்**

காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
070-212678

(70166)


# கோப்பாய் பிரதேசத்தில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களில் சிலர் திரும்பவும் வெளி இடங்களுக்குச்சென்று வசிப்பதால், பிரிவின் சரியான குடித் தொகையையும் சனத்தொகையையும் கணிப்பதற்காக பிரிவில் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகள் அந்தந்த கிராம உத்தியோகத்தர்களால் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இம்மீளாய்வு நடவடிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை அந்தந்தக் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் நடைபெறும்.

எனவே வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வதியும் சகலரும் தத்தமது கிராம உத்தியோகத்தர்களிடம் பங்கீட்டு அட்டை, நிவாரண முத்திரை, அடையாள அட்டை ஆகியவற்றுடன் சென்று தம்மிடம் உள்ள பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்து கொள்ளும்படி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதத்தில் இருந்து இடம்பெயர் நிவாரணம், சகாய விலைப் பொருள்கள், பிரயாண அனுமதிச் சிபார்சுகள் யாவும் மீளாய்வு செய்யப்பட்ட பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கே வழங்கப்படும் என்றும்—

சகலரும் தத்தமது பங்கீட்டு அட்டைகளை உரிய காலத்தில் மீளாய்வு செய்து கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் ச. இராமலிங்கம் தலைமையில் கல்லூரியின் வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், திருமதி சுபத்திராதேவி சண்முகநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி செல்லையா, ஜீ. ரி சற் அமைப்பின் சமூக ஒருங்கிணைப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவரும் இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளருமான நாச்சியார் செல்வநாயகம் நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

பரிசளிப்புவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ-7)


## கொக்குவில் இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2000

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மேற்படி அனுமதிக்காக எமது கல்லூரி அலுவலகத்தில் இன்றுமுதல் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 15—11—99 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

– அதிபர்.

(சி/9518)



## வலயக் கல்வித் திணைக்களம், தென்மராட்சி.
## கேள்வி அறிவித்தல் -திருத்தம்

24—10—99ஆந் திகதிய பத்திரிகையில் வெளிவந்த கேள்வி அறிவித்தலின்படி கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி ஒக்ரோபர் 29 ஆம் திகதி காலை 10-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மு. ப. 10-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. வ. செல்வராசா
வலயக் கல்விப் பணிப்பாளருக்காக
தென்மராட்சி, சாவகச்சேரி.

பாடசாலை வேலைகள்கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி.

(சி/9519)



## வாழ்த்துகின்றோம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர்
லயன் வைத்திய கலாநிதி **வை. தியாகராஜா**
அவர்களும்
கழகத்தின் செயற்குழு உறுப்பினரும் உடுவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமான
**திரு. எஸ். ஆர். ஜெயப்பிரகாசம்**
அவர்களும்
சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றதையிட்டும் கழகத்தின் செயற்குழு உறுப்பினரும் யா/யாழ்ரன் கல்லூரி அதிபருமான
**திரு. என். பரமசிவம்**
அவர்கள் ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றதையிட்டும் வாழ்த்துகிறோம்.

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்.

(70330)



## நன்றி கூறுகின்றோம்

### யா/ சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
வடலியடைப்பு — பண்டத்தரிப்பு.

### ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை -99

1. நவராஜா ஜசிந்தா — 137
2. செல்வராஜா ஜயப்பிரதாப் — 123
3. கந்தராஜா துவாரகன் — 119

மேற்படி மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கு அயராது ஊக்குவித்த அதிபர் திரு. வி. நடராஜா அவர்களையும், விசேட வகுப்புகளை நடத்திய செல்வி இ. சுமதி அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

வடலியடைப்பு. – பெற்றோர்.
(70328)



## நாகலிங்கம்ஸ்
சுன்னாகம்

மம்முட்டி - தேவயானி
நடித்த

**மறுமலர்ச்சி**

காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70335)


## மரண அறிவித்தல்கள்

ஸ்ரீமதி
### கிருஷ்ணசாமிக்குருக்கள் இரத்தினம்மா
[பொன்னுச்சாமிக் குருக்கள்]

மட்டுவிலைச் சேர்ந்த ஸ்ரீமதி கி. இரத்தினம்மா அவர்கள் 24-10-99 ஞாயிறன்று சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-10-99 திங்கட்கிழமையன்று நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கி. சதாசிவ சர்மா
கி. சோமசுந்தரக் குருக்கள்
(பிள்ளைகள்)

''கீதாலயம்'',
மட்டுவில், சாவகச்சேரி. (சி/9521)

### குருசாமி பாண்டியன்

நீராவியடியை வசிப்பிடமாகக் கொண்ட குருசாமி பாண்டியன் நேற்று 25 - 10 - 99 காலமானார்.

அன்னார் முத்துராஜி (முத்தக்கா)யின் அன்புக் கணவரும் செல்வராஜா, இந்துமதி (பாமா), இந்திராணி (பவா, பாலர் ஆசிரியை, யா. மா. ச) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஏகாம்பரநாதன் (நாதன்), ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று 26-10-99 பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. ஏகாம்பரநாதன்
(மருமகன்)

24, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
நீராவியடி.
(70343)

### மார்க்கண்டு முருகேசம்பிள்ளை
(மங்களா சைக்கிள் வேக்ஸ், பண்டத்தரிப்பு.)

வட்டு. வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்தமார்க்கண்டு முருகேசம்பிள்ளை 25-10-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னரத்தினத்தின் கணவரும் நாகரத்தினம், தங்கரத்தினம், காலஞ்சென்ற தர்பிராசா (பொலீஸ் சார்ஜன்ட்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற முத்தையா, தம்பிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி, சர்வேஸ்வரி, காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரன் ஆகியோரின் தகப்பனாரும் சிறிரஞ்சன், கலாதரன் ஆகியோரின் மாமனாரும் உமாபதி, சிந்துஜா, சுபராஜன், விலோஜன், விக்னசுதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26-10-99) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சிறிரஞ்சன்

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.
(70337)

## கண்ணீர் அஞ்சலி



கந்தன் ஸ்ரோர்ஸ் (பண்டத்தரிப்பு) ராஜ்ஹோட்டல் (வவுனியா), ரி. எஸ் எஸ். ரான்ஸ்போர்ட் ஆகியவற்றின் உரிமையாளரும்
பிரான்பற்று முருகன் ஆலய முன்னாள் தலைவருமான
### சாமிநாதன் சின்னராஜா
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

பிரான்பற்று மக்கள்

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.
(70312)

## பிறந்த நாளில்



### ந. சுகிர்தராஜன்

தோற்றம்:– 26 - 10 - 60
மறைவு :– 14 - 08 - 95

நினைவு கூரும்
அம்மா,
சகோதரர்கள்.

இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(70339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் திமோர் அழிவுகளுக்கு இந்தோனேசியாவே காரணம்

## குஸ்மாஓ குற்றச்சாட்டு

டிலி, ஒக். 26

கிழக்குத் திமோரில் இடம்பெற்ற வன்முறைகள், சேதங்கள், கொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு இந்தோனேசியாவே காரணம் என்று அண்மையில் நாடு திரும்பிய கிழக்குத் திமோர் சுதந்திரப் போராட்டத் தலைவர் ஸனானே குஸ்மாஓ குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தோனேசிய அரசால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த குஸ்மாஓ கடந்த ஒகஸ்ட் மாதம் விடுதலை செய்யப்பட்டார் எனினும் அவர் கிழக்குத் திமோருக்குச்செல்ல இந்தோனேசிய அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை. இதனை அடுத்து அவர் ஆஸ்திரேலியா சென்றிருந்தார்.

அவர் மீண்டும் கிழக்குத் திமோருக்கு திரும்புவதற்கு இந்தோனேசிய அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை அனுமதி வழங்கியதை அடுத்து நாடு திரும்பியுள்ள குஸ்மாஓ கிழக்குத் திமோரில் அழிவுகள் இடம்பெற்ற இடங்களை நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

வன்முறையால் சேதமாக்கப்பட்ட வீடுகள், கடைகள் என்பவற்றையும் அவர் பார்வையிட்டார். அங்கு திரண்டிருந்த மக்கள் பெரும் ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர்.

[இ-6]

# இந்திய இராணுவம் நவீன மயமாக்கப்படும்

## ஜனாதிபதி நாடாளுமன்றில் உரை

புதுடில்லி, ஒக். 26

எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்கும் விதத்தில் இந்திய இராணுவம் நவீனமயமாக்கப்படும் என்று இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்தியாவின் 13 ஆவது நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இரு அவைகளும் கலந்து கொண்ட கலப்புக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:–

கடந்த மே மாதம் காஷ்மீர் பகுதியில் இடம்பெற்ற ஊடுருவலுக்குப் பின்னர் இந்த நடவடிக்கை அவசியமாக உள்ளது. புதிய அரசாங்கம் இராணுவத்துக்கான நவீன ஆயுதங்களைப் பெற்றுக் கொடுத்து இராணுவத்தை முழு அளவில் நவீன மயப்படுத்தும்.

உலக அரங்கில்

கார்கிலில இடம்பெற்ற மோதல்கள் இந்திய படைகள் நவீன மயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நாட்டுக்கு உணர்த்தி நிற்கின்றன. நாட்டின் அனைத்து முனைகளிலும் சீர்குலைவு நடவடிக்கைகளை முறியடித்து நாடு முழுவதையும் உஷார் நிலையில் வைத்திருக்க அரசாங்கம் உறுதியுடன் இருக்கிறது.

பாகுபாடற்ற வகையில் உலகளாவிய அணு ஆயுதக் குறைப்புக்கான உறுதிப்பாட்டை அரசு வலியுறுத்தும் அதே சமயம் இந்தியாவின் கேந்திர சுபாதீனத்தைப் பேணிக்காப்பதற்கும் நாடு உறுதி பூண்டுள்ளது.

இந்தியாவின் சட்டபூர்வமான நியாய பூர்வமான பாதுகாப்புப் பிரச்சினைகள் எந்த வகையில் அமைகின்றனவோ அதற்குப் பொருத்தமாகவே இந்தியா நடந்து கொள்ளும்

பாகிஸ்தானில் ஏற்படடு வரும் நிலையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அதேவேளை — எல்லைக்கு அப்பால் இருந்ததான பயங்கரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கார்கிலில் அடைந்த தோல்வியை அடுத்து பாகிஸ்தான் படைகள் இந்தியாவில் மறைமுகப் போரைத் தீவிரப் படுத்தி உள்ளன. அதேநேரம் ஆப்கானிஸ்தானில் காணப்படும் நிலைமையும் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைப் பாதித்துள்ளது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கார்கில்

# ஊடுருவல் குறித்த அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்

புதுடில்லி, ஒக், 26

இந்திய—பாகிஸ்தான் எல்லைப் பகுதியான கார்கிலில் இடம்பெற்ற ஊடுருவல் நடவடிக்கைகள் குறித்து நடைபெற்ற விசாரணைகளின் அறிக்கை இன்னும் ஓரிரு வாரங்களில் இந்திய அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஊடுருவல் குறித்து விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் எல். சுபபிரமணியம் இந்தத் தகவலை கஷ்மீரில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் கார்கிலில் இந்திய எல்லைப் பகுதிக்குள் பெருமளவு ஊடுருவல்காரர்கள் சட்ட விரோதமான முறையில் ஊடுருவி அங்கு தளங்களை அமைத்திருந்தனர்.

பாகிஸ்தான் படையினரும், அவர்களது ஆதரவு பெற்ற தீவிரவாதிகளுமே ஊடுருவி இருந்ததாக இந்தியா குற்றம் சாட்டி இருந்தது நீண்ட நாள்கள் இடம்பெற்ற மோதல்களின் பின ஊடுருவல்காரர்கள் பாகிஸ்தானுக்கு பின் வாங்கிச் சென்றனர்.

இந்த ஊடுருவல் எவ்வாறு நிகழ்ந்தது? எவ்வளவு காலத்துக்கு முன்னர் திட்டமிடப்பட்டு இது நடைபெற்றது? ஊடுருவல குறித்து இந்தியப் படையினர் உடனடியாக அறிந்து கொள்ள முடியாமல் இருந்தமைக்கான காரணம் என்பன குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வென இந்திய மத்திய அரசு ஒரு குழுவை நியமித்திருந்தது.

அந்தக் குழுவின் அறிக்கை இறுதிக் கட்டததை நெருங்கிவிட்டது என்றும்—

விரைவில் அது அரசிடம் கையளிக்கப்படும் எனவும் எல்.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

(இ-6)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவாது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டமுகாமையாளரும்,
அனைத்து ஊழியர்களும்,
**பட்டினிக்கு எதிரான நிறுவனம்,**
யாழ்ப்பாணம்.

3, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

[70333]

# ஜெனரல் முஷாரப் 3 நாள் விஜயமாக சவூதி சென்றார்

இஸ்லாமாபாத், ஒக். 26

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று சவூதி அரேபியா பயணமானார்.

சவூதி அரேபிய மன்னர், இளவரசர் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்துவார். பின்னர் அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு விஜயம் செய்வார்.

நவாஸ் ஷெரிப் அரசுகவிழ்க்கப்பட்டு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் ஜெனரல் முஷாரப் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-6)

பாகிஸ்தான் கடற்படைக்கான

# நீர்மூழ்கி விநியோகத்தை பிரான்ஸ் இடை நிறுத்தியது

இஸ்லாமாபாத், ஒக். 26

பாகிஸ்தான் கடற்படைக்கென பிரான்ஸிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட அதி நவீன நீர்மூழ்கிக் கப்பலை பாகிஸ்தானுக்கு வழங்குவதை பிரான்ஸ் இடை நிறுத்தி வைத்துள்ளது என்று இஸ்லாமாபாத செய்திகள் தெரிவிக்கின்றன.

நவாஸ் ஷெரிப் அரசாங்கம் பதவியில் இருந்த போது இந்த நீர்மூழ்கிக் கப்பலை கொள்வனவுக்கான ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது.

ஷெரிப்பின் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்படடு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்தே நீர்மூழ்கிக் கப்பலை பாகிஸ்தானுக்கு அனுப்புவதை பிரான்ஸ் இடை நிறுத்தி உள்ளது.

பாகிஸ்தான் இராணுவ அரசாங்கத்துடனான ஆயுதத் தொடர்புள்ள வர்த்தக விநியோகம் அனைத்தையும் நிறுத்துவது என பிரான்ஸ் அரசு எடுத்த முடிவுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அஜெஸ்கா டி — 90 என்ற இந்த ரக நீர்மூழ்கிக்கப்பல் பாகிஸ்தான் கடற்படையில் இணைந்து கொள்ளவென கடந்த வியாழக்கிழமை பிரான்ஸில் இருந்து புறப்பட ஆயத்தமாக இருந்தது.

எனினும் பிரெஞ்சுக் கடற்படையின் இறுதி நேர முடிவின் படி நீர்மூழ்கிக் கப்பலின் பயணம் நிறுத்தப்பட்டது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் பிரான்ஸின் கப்பல் கட்டும் தளம் ஒன்றில் கட்டப்பட்டது. அதிநவீன தொழில் நுட்பத்தையும் சிறந்த தொலைத் தொடர்பு வசதிகளையும் கொண்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல் பாகிஸ்தான் கடற்படையிடம் உள்ள நீர் மூழ் கிக்கப்பல்களிலேயே சிறந்த தாக்குதல் திறனை உடையதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது.

நீர்மூழ்கிக் கப்பல் விநியோகத்தை பிரான்ஸ் இடை நிறுத்தியது பாகிஸ்தான் கடற்படை அபிவிருத்திக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவு என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். [இ-6]

# ஆர்ஜென்ரீனாவின் புதிய ஜனாதிபதி

ஆர்ஜென்ரீனா நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் சர்ண டேவல்லே ரோவா வெற்றி பெற்றுள்ளார்.

62 வயதான இவர் இடது சாரிப் போக்குடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது

[இ-6]

# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **அம்பலவாணர் சோதிலிங்கம்**

தோற்றம் 12-05-1953 — மறைவு 28-09--1999

28—09—1999 காலை இறைபடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் அம்பலவாணர் சோதிலிங்கம் அவர்களின் அந்தியேட்டி 26 10—1999 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும், பிதிர் வழிபாட்டுக் கிரியைகள் 28—10—1999 வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 33 ஆம் இலக்கத்திலுள்ள எமது இல்லத்திலும் நடைபெறும்

எமது குடும்பத் தலைவரின் நீர்க்கடன், பிதிர்க் கடன் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புரிமை கொண்டு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்
(குடும்பத்தினர்).

33, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(70333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

309, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த ஞா. டிலிபன் என்பவருடைய விசேட அ. அட்டை யாழ். நகரில் 22—10—99 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரியில் அல்லது மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (70319)

### புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலை 35/- மட்டுமே. PRIMA Hi Line ஒன்பது நாள் வளர்ச்சி அடைந்த சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. வை. சிவகுமார் நாவலர் வீதி, (அரவிந் வீடியோ அருகில்) அத்தியடி, யாழ்ப்பாணம். [70316]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் இலக்கணம் இன்றி ஆங்கிலத்தில் கதைக்கப் பயில (புதிய. மாணவர் பதிவுகள் சனி, ஞாயிறு, புதன், வியாழன் மாலை) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [70304]

## கொள்வனவுக்கு கழிவுகிடைக்கும்

உரும்பிராய், ஒக். 26

உரும்பிராய், ஊரெழு உற்பத்தி நுகர்ச்சி விவசாய சேவைக் கூட்டுவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு கொள்வனவுக்கு ஏற்றகழிவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்படி சங்கத்தின் பல்பொருள் விற்பனை நிலையத்தில் தமது பொருள்களைக் கொள்வனவு செய்யும் சங்க உறுப்பினர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் மொத்தக் கொள்வனவு கணக்கிடப்பட்டு அதற்கேற்ப கழிவு வழங்கப்படும்.

கொள்வனவு செய்யும் போது அவற்றைப் பதிவு செய்வதற்காக உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கையேடு வழங்கப்படுகின்றது. [இ-154]

## பருத்தித்துறை விஜயம்

மத்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எம். சி. பிரேமரத்ன, கடந்த சனிக்கிழமை மாலை பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவுக்கு விஜயம் செய்தார்.

இவரது வருகையை ஒட்டி இ. போ. ச. டிப்போ வளவு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம், செயலாற்று முகாமையாளர் எஸ். மணிவாசகம், பிராந்தியக் கணக்காளர் ஆர். ஜெயச்சந்திரன், மத்திய போக்குவரத்துச சபை நிர்வாக உத்தியோகத்தர் பிரான்ஸிஸ் சேவியர் ஆகியோரும் பொது முகாமையாளருடன் பருத்தித்துறைவந்திருந்தனர்

அங்கு பருத்தித்துறைசாலை பொது முகாமையாளர் க. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஊழியர்களின்பிரச்சினைகள், ஓடமுடியாத நிலையிலிருக்கும் பஸ்கள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன

இந்தக் கூட்டத்தில் தொழிலாளர்கள் சார்பில் எஸ். கதிரித்தம்பியினால்சிலயோசனைகள் முன்வைக்கப்பட்டன.

(இ-109)


## விநாயகர் புடைவை அகத்தினரின்
## தீபாவளி
## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறிவகைகள், பஞ்சாபி சூட்வகைசள் மற்றும் இன்னோரன்ன புடைவைத் தினிசுகளும் சிறப்புத் தள்ளுபடி விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வாருங்கள்! வந்து பாருங்கள் சிறப்புத் தள்ளுபடி விலை எப்படியென்று அப்போதுதான் உண்மை புரியும். இந்தச் சலுகை தீபாவளி வரை மட்டுமே. உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்.

62 A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி/9461)


## மனமாரப் பாராட்டுகின்றோம்

யா/வல்வெட்டி
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
ஐந்தாந்தரப் புலமைப் பரிசில்
பரீட்சை - 1999

ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை தேடித் தந்த மாணவன்

**தருமகுலசிங்கம் சுகந்தன் (135 புள்ளிகள்)**

அவர்களையும் சித்தியடைய வழிகாட்டிய ஆசிரியர்களையும், நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

(70327) -பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்.


## தமிழ் இணையம் 2000

தமிழ் இணையம்

உடன் இணைந்து நடத்தும்
தமிழ் மாணவர்களுக்கான
தமிழில் தகவல்
தொழில் நுட்பப் புதிர்ப் போட்டி

''தமிழ் இணையம் 2000'' தமிழ் மொழியில் தகவல் தொழில் நுட்பத்தை உபயோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஒரு பகுதி முயற்சியாக தகவல் தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்ய மாணவர்களுக்கிடையே ஒரு புதிர்ப் போட்டியை நடத்த உள்ளது. இப் போட்டி முதலில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்படுவோர் மாகாண மட்டத்தில் பங்குபற்ற வாய்ப்பளிக்கப்படுவர் மாகாண மட்டத்தில் வெற்றி பெறுவோர் தேசிய மட்டத்தில் பங்கு பற்றுவர். தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் பாடசாலைக்கு வெகுமதியாக கணனி ஆய்வுகூடம் ஒன்று கொடுக்கப்படும். அத்தோடு பின்வரும்

''தமிழ் இணையம் 2000 தகவல்
தொழில் நுட்ப திறமைசாலி''
என்ற பட்டமும் வழங்கப்படும்.

மாவட்ட, மாகாண தேசிய மட்டங்களில் நடத்தப்படும் ஒவ்வொரு போட்டியும் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும்

| | |
|---|---|
| பங்குபற்றுவோர்: | அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை உயர்வகுப்பு மாணவர்கள் |
| குழுவொன்றின் அங்கத்துவ எண்ணிக்கை: | மூன்று |
| மொழி மூலம்: | தமிழ் |
| புதிர் சுற்றுநேரம்: | 30 நிமிடம்: மூன்று சுற்றுகள் |

பாடசாலை அதிபர்கள் மூன்றுஅங்கத்தவர் பெயர்களையும் இரண்டு மேலதிக உறுப்பினர்களையும் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் இவ் அலுவலகத்திற்கு 15-11-1999 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டப்படுகிறார்கள்.

தொலைபேசி இல: 682690
தொலைநகலி இல: 682689

தொடர்பு கொள்ள வேண்டியவர்:
**திருமதி வாசுகி சபாரத்தினம்**
மின்னஞ்சல்: olcchmn @ sri. lanka. net

தலைவர்,
நெறிப்படுத்தும் குழு,
தமிழ் இணையம் 2000.

முகவரி:
அரச கரும மொழிகள் ஆணைக்குழு,
ஒஸ்டின் இடம்,
கொழும்பு - 8

(சி/9515)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்ற பருத்தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை மாணவியான

**செல்வி வாஹினி ஞானச்சந்திரனின்**

கல்விக்கு வித்திட்ட மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பருத்தித்துறை தட்டாதெரு
மெ. மி. த. க. ப டசாலை. .

(70324)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை

காரைநகர் களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் I.B C. றோட் வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை 24—10—99 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, உலகேஸ்வரி (ஆசிரியை), Dr. நகுலேஸ்வரி (Medi Clinic), சின்னத்தம்பி (கணக்காளர்), சங்கரப்பிள்ளை (கணக்காளர்), ஓம்சக்தி ஆகியோரின் அன்புத் தாயும், ஆறுமுகம், குணநாயகம் (ப.நோ.கூ.ச. காரைநகர்), கமலாசனி, புவனேஸ்வரி, திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியா கூழாங்குளத்தில் இன்று (26—10—99) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கு. உலகேஸ்வரி (மகள்)
திரு. குணநாயகம் (மருமகன்)
கு. சிறிகாந்தா (பேரன்)

பொன்னாவளை,
களபூமி, காரைநகர்.

[70315]

## திருமதி முருகேசு இராசநவமணி

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு இராசநவமணி 21—10—99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கோவிந்தபிள்ளை தம்பதிகளின் அன்புமருமகளும், மங்கையற்கரசி, காலஞ் சென்ற நவரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சுவராஜசிங்கம், புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும், பொன்ராணி, Capt. M பஞ்சாட்சரம் (Mercantile Shipping Company), யோகானந்தராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலிங்கம் (S. L. T. B. கோண்டாவில்), விஜியந்தி (கொழும்பு), ஜெயந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுபானு, சைராபானு, பானுரேக்கா, புருஷோத்மன், தாட்சாயிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 — 10 — 99 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கனகலிங்கம்
(மருமகன்)

''பொன்னில்லம்',
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(70322)

## சாமிநாதன் சின்னர்ராஜா

பண்டத்தரிப்பு பிரான்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா றம்பைக்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், கந்தன் ஸ்ரோர்ஸ் (பண்டத்தரிப்பு), றாஜ் ஹோட்டல் (வவுனியா), ரி.எஸ்.எஸ். ரான்ஸ் போர்ட் ஆகியவற்றின் உரிமையாளருமான சாமிநாதன் சின்னராஜா 24-10-99 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [26-10-99] செவ்வாய்க்கிழமை வவுனியாவில் அவரது இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. ராசு, திரு. லிங்கம்

பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
T.P 024—22069
T P 024—21284

[70313]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் நடைபெற உள்ள

# கற்றல் உபகரணக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக் 26

கல்வி, உயர்கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக்கான செயலமைப்பு நாடளாவிய ரீதியில் கற்றல் உபகரணக் கண்காட்சியை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

கல்வி வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சி தரமான கற்றல் உபகரணங்களை நிர்மாணிப்போரைத் தெரிவு செய்து சான்றிதழ்களை வழங்கத்தீர்மானித்துள்ளது. ஆண்டு 1 முதல் 5 வரையான பாடத்திட்டத்துக்கு அமைவாக கண்காட்சி நடைபெறும்.

மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் —

பார்த்தல், கேட்டல், உணர்தல் வழியாக அவர்கள் பெறும் கல்வியை உறுதி செய்யும் வகையிலும் —

சிறந்த மனப்பாங்கை உருவாக்கும் வகையிலும் —

மீட்டல் நடவடிக்கைக்கு உதவுவதாகவும், திறமைகளை ஏற்ற இடங்களில் விருத்தி செய்து கொள்ளும் வகையிலும் அமைதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி வலய மட்டத்திலான கண்காட்சி 2000 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் தரத்திற்கு அனுமதிக்கும் வாரத்தில் நடைபெறும்.

மாகாண மட்டத்திலான கண்காட்சி 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெறும். கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்டவர்களது பட்டியல் கல்வி, உயர் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு அனுப்பப்படல் வேண்டும் என்றும்—

கண்காட்சி ஒழுங்குகள் யாவும் மாகாண கல்விப் பணிப்பாளரினதும் மாகாண ஆரம்பக்கல்வி இணைப்பதிகாரியினதும் பொறுப்பாகும் என்றும்—

தேசிய மட்டத்திலான கண்காட்சியில் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆக்கங்கள் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி கொழும்பில் உத்தேசிக்கப்பட்ட இடத்தில் நடைபெறும் என்றும்—

இதற்கான ஒழுங்குகள் யாவும் கல்வி, உயர்கல்வி அமைச்சின் ஆரம்பக்கல்விப் பிரிவின் மூலம் ஆரம்பக் கல்வித் திட்டமிடல் செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-10-111]

# ஆயுள்வேதவைத்தியருக்கு சமாதான நீதிவான் பதவி

வலி. வடக்கு, ஒக் 26

ஆயுள்வேத வைத்தியர்களைச் சமாதான நீதிவானாக நியமனம் செய்வதற்கான நடவடிக்கையை வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சின் ஆயுள்வேத திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகப் பிரபல்யம் மிக்க ஆயுள்வேத வைத்தியரின் பெயரைச் சிபார்சு செய்யும்படி பிரதேச செயலர்கள் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளனர்-

(இ-86)

# கடும் மழையில் கடலில் தத்தளித்த குமுதினிப்படகு

நெடுந்தீவு, ஒக். 26

நெடுந்தீவில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஊர்காவற்றுறை நோக்கிப் புறப்பட்ட அரச படகு குமுதினி பலத்த மழை காரணமாக நடுக்கடலில் சுமார் 2 மணி நேரம் தத்தளித்து மீண்டும் நெடுந்தீவுக் கரையைச் சென்றடைந்தது.

குமுதினி படகில் முன்னர் திசையறி கருவி பொருத்தப்பட்டிருந்தது. படகு மீண்டும் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டபோது திசையறி கருவி பொருத்தப்படவில்லை.

கடும் மழை காரணமாக ஏனைய தீவுகளின் கரைகளை அடையாளம் கண்டு சரியான திசையை நோக்கி இதனைச் செலுத்த முடியவில்லை என்று கூறப்பட்டது.

நீண்ட நேரம் நடுக்கடலில் படகு தத்தளித்ததனால் பயணிகள் பீதியடைந்தனர். ஒருவாறு குமுதினி நெடுந்தீவுக் கரையைச் சேர்ந்த பின்னர்தான் பயணிகள் நிம்மதியடைந்தனர். மழை விட்டதும் மீண்டும் குமுதினி ஊர்காவற்றுறைக்கான பயணத்தை ஆரம்பித்தது [இ-111]

# நல்லூர் செயலர் பிரிவில்

# மேலும் 263 பேருக்கு ரூ. 5,000 கொடுப்பனவு

வலி.கிழக்கு, ஒக். 26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்வுப் பணம் 5ஆயிரம்ரூபா கொடுப்பனவுகள் மேலும்263பேருக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜே,95, ஜே,96, ஜே,98, ஜே,100, ஜே,103, ஜே,104, ஜே,105, ஜே,106, ஜே,108, ஜே,109, ஜே,110, ஜே,111, ஜே,114, ஜே,119, ஜே,124, ஜே,125 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 263 பேருக்கே இந்தக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தக்கொடுப்பனவுகளைப் பெறவுள்ளவர்கள் தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு பெயர்களை உறுதி செய்த பின்னர் இன்று 26 ஆம் திகதிக்குப் பின்னர் வங்கிகளில் பணத்தினைப் பெற முடியும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# 2 ஆயிரம் ஆண்டுக்குரிய

# தரம் 2,7,10 பாட நூல்கள் புதிதாகத் தயாரிக்கப்படும்

வலிகாமம் தெற்கு, ஒக். 26

2000 ஆம் ஆண்டுக்குரிய தரம் 2, 7, 10 ஆகியவற்றுக்குரிய சகல பாட நூல்களும் புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் புதிதாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட உள்ளதாக பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமுமான ஈ. டபிள்யூ. அபேநாயக்க அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான இலவச பாட நூல்களை வழங்குவது சம்பந்தமான அறிவிப்பின் போது அவர் இதனை அறிவித்துள்ளார்.

2, 7, 10 தரங்களில் புதிய நூல்கள் சகல பாடங்களுக்கும் வழங்கப்பட உள்ளதால் இந்த ஆண்டு வழங்கப்பட்ட புத்தகங்களை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டியதில்லை.

அவரவர் மதம் சம்பந்தமான சமய நூல்கள் சகலருக்கும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். பல மதங்கள் கற்பிக்கப்படும் பாடசாலைகளில் குறிக்கப்பட்ட ஒரு மதத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தால் அந்த மதம் ஒரு பாடமாக பல பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வேண்டிய நூல்களும் பெற்று வழங்கப்பட வேண்டும்.

இப்படி அபேநாயக்கா அறிவுறுத்தியுள்ளார்.

(இ-152)

# ஒலிக்கருவி அபகரிப்பு

நெல்லியடி, ஒக். 26

கப்பலில் பொருள்களைஏற்றுவதற்காகத் தரித்து நின்ற லொறியில் இணைக்கப்பட்டிருந்த சுமார் 5 ஆயிரம் ரூபா பெமதியான ஒலி எழுப்பும் கருவி (ஹோர்ன்) இனந்தெரியாதவர்களினால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அண்மையில் புலோலி ஓராம் கட்டைச் சந்தியில் இடம்பெற்றது.

பருத்தித்துறை துறைமுகத்தின் கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருள்களை ஏற்றுவதற்காக இப்பகுதியில் லொறிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயமே லொறியில் இத்திருட்டு இடம்பெற்றுளது.

இத்திருட்டுக் குறித்து லொறிச் சாரதி யாழ். மாவட்ட லொறி உரிமையாளர் சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஐ - 109)

# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஒக். 26

"இணுவை சிவகாமி அம்மைத் தமிழ்" "பஞ்ச வர்ணத்தூது" ஆகிய நூல்களின் அறிமுக விழா நாளை புதன்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நூல்கள இணுவில் சிவகாமிஅம்மன் ஆலயத்தில் இருந்தும் இளந்தாரி கோயிலில் இருந்தும் ஊர்வலமாக விழாமண்டபத்துக்கு எடுத்து வரப்படும்.

நூல் வெளியீட்டு உரையை இணுவில் மத்தியகல்லூரி அதிபர் துரை எங்கரசுவும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் வழங்குவார்கள்.

முதற் பிரதிகளை செ. மதியாபரணமும், ஆறு. திருமுருகனும் பெற்றுக்கொள்வார்கள்.

தொடர்ந்து நூல் ஆய்வுரையை கலாநிதி சபா. ஜெயராசாவும் கலாநிதி சி. சிவலிங்கராசாவும் நிகழ்த்துவார்கள்.

(இ-8)

# கூட்டுறவுச் சங்கக் கிளையைத் திறக்குமாறு கோரிக்கை

வடமராட்சி, ஒக். 26

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள வத்திராயனில் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றைத் திறக்குமாறு பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் சி.க. வேலாயுதபிள்ளையையும் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளரையும் கேட்டுள்ளார்.

வத்திராயன் பகுதியில் மீள் குடியமர்ந்த மக்கள் பாவனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குவதால் இப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்று அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[இ-137]

# பாவனைக்கு விடப்படவில்லை

வளலாய், ஒக். 26

வளலாய் தம்பாலை பொதுச்சந்தை வளவில் 3 லட்சம் ரூபா செலவில் ஐ. நா. உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக புனரமைக்கப்பட்ட மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, ஆயுள்வேத சிகிச்சை நிலையம் என்பன இரண்டு ஆண்டுகள் ஆகியும் பாவனைக்கு திறந்து விடப்படவில்லை. (இ-178)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சங்கானை ஸ்தான அ. மி. த. க.

பாடசாலையின் மாணவியான

**செல்வி டேசிகா தங்கராசா**

அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில்

150 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக

அவரது உயர்வுக்கு உந்து சக்தியாக அமைந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊக்குவித்தோர் அனைவரையும் மனமாரப் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

திரு. திருமதி தங்கராசா,
விக்கினேஸ்வரி,
(பெற்றோர்)
அம்மம்மா, மாமாமார், அன்ரிமார்.

புதுச்சிவன் கோயிலடி,
சங்கானை.

[70323]

## யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்

**தரம் - 6 அனுமதி - 2000**

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை 1999—10 27 தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


விண்ணப்ப முடிவு திகதி : 1999-11-10

-- அதிபர்

யா/கனகரட்ணம் ம. ம. வி.,
யாழ்ப்பாணம்.

(சி/9514)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14 – 02 – 1974

இறைவன் அடியில்
06 – 11 – 1998

அமரர்

**சின்னத்தம்பி தவநாதன்**

(தேவாக்குட்டி)

திதி: 26 – 10 – 1999

ஆண்டு ஒன்று சென்றதையா!
மாறவில்லை எம் துயரம்
தவநாதனே உன்னை
இழந்து பரிதவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார்.

கைதடி தெற்கு,
கைதடி.

(70321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு புதியது
விலை ஐம்பது ரூபா

**புதிய விநாயகர் களஞ்சியம்**
211A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(70320)



## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை- 1999

**யாழ். ஆனைப்பந்தி மெ. மி. வி.**
மாணவன்
**செல்வன் தியாகராஜா பிரசாந்தன்**
153 புள்ளிகள் பெற்று
அப் பாடசாலையில் முதன்மை மாணவனாகச் சித்தியடைந்துள்ளார். அவரையும், அவருடன் சேர்ந்து சித்தியடைந்த 9 மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

(70307) — பாடசாலை நலன் விரும்பிகள்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ். புனித**
**ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
**தேவராஜா சதீசனையும்**
அவர் உயர்வுக்கு வித்திட்ட அக்கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெரியப்பா, பெரியம்மா, கௌரி அக்கா,
இளங்கோ அண்ணா, வாணியக்கா,
கீதாக்கா, சுமதியக்கா, கேதீஸ் மாமா
ஞான. திருக்கேதீஸ்வரன்.
இணுவில். (70317)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. நாகமுத்து சங்கரப்பிள்ளை**

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத்தின் தலைவரும், பிரசைகள் குழுச் செயலாளரும், இணக்கசபையின் உறுப்பினரும், பனை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரும், கலை, கலாசார பேரவையின் பொருளாளரும், நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும், ஓய்வு பெற்ற அதிபரும், சமய, சமூக சேவையாளருமாகிய திரு. நாகமுத்து சங்கரப்பிள்ளை அவர்கள் 8 - 10 - 99 ஆம் திகதி சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதைப் பாராட்டுவதோடு, இவரின் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள்,
உத்தியோகத்தர்கள்.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்
நெடுந்தீவு.
(70306)


## வெள்ளத்தால் பயிர் அழிவு

வடமராட்சி, ஒக். 26

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது.

நெல் முளைப்பதற்கு முன்னர் மழை வெள்ளம் மூடியதாலேயே அழிவு ஏற்பட்டுள்ளது. [இ-173]

## நூலகம் புனரமைப்பு

வடமராட்சி, ஒக். 26

புலோலி பொதுநூல் நிலையம் 80 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனை நிர்வகித்துவரும் பருத்தித்துறை பிரதேச சபை இந்த புனரமைப்புப் பணியை மேற்கொண்டது. (இ-173)

## பயிற்சி நெறி

வடமராட்சி, ஒக். 26

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகின் வடமராட்சி நிலையத்தில் ஆங்கில மொழி மூலமான தொடர்பியல் ஏழாம் பகுதி பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது. (இ-173)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**கலைப்பீடம்**
கல்வி ஆண்டு
1998 / 1999

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களுக்கான 1998/1999 ஆம் கல்வி ஆண்டு இன்று 1999 - 10 - 26 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. முதலாம் வருடத்திற்குரிய கலைப்பீட புதிய மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 9.00மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் சமுகம் அளிக்குமாறு கலைப் பீடாதிபதி கேட்டுக்கொள்கின்றார்.

— பதிவாளர்.
(சி/9513)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கலாநிதி சின்னத்தம்பி கதிர்காமத்தையா**
B.Sc Hons. (Cey), M Sc., Phd. (Mc Gill, Canada)
ஏற்றுமதி விளைபொருள் விவசாயத் திணைக்களத்தின்
முன்னாள் பணிப்பாளர்

மலர்வு: 22 - 07 - 1937
உதிர்வு: 26 - 10 - 1998

அன்பும் கருணையும் அருங் குணம் பலவும்
கொண்டே குடும்பம் சிறந்திடக் காத்த
எங்கள் குலத்தின் தெய்வமே உங்களை
என்றும் மனமெனும் கோயிலில் வைத்துள்ளோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பெறாமக்கள்.

கயந்தப்பை,
தெல்லிப்பழை மேற்கு,
தெல்லிப்பழை.
(70318)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அப்புத்துரை நாகராஜாப் பத்தர்**

தவப்பேறு: 1940 - 07 - 24
சிவப்பேறு: 1998 - 11 - 05

பார்த்திருக்கச் சென்றதையா ஓராண்டு
சேர்த்தநினைவு மாறாது நூறாண்டானாலும்.
ஆத்மாசாந்தி பெறப் பிரார்த்தனை செய்தோம்
காத்தருள்வாய் கந்தா உன்பத்ம
பாதம் போற்றி போற்றி.

மனைவி, மக்கள்,
சகோதரர், மச்சான்மார்.

இல. 70. காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(70301)



உ
சிவமயம்



வண்ணை - சாந்தையர் மடம்
**ஸ்ரீகற்பக விநாயகர் கோயில்**
**மகாகும்பாபிஷேக 45 ஆவது நாள்**
# மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா
★★★★★★★★★★★★★★★

நாள்: 27-10-99 புதன்கிழமை நேரம்: காலை 9 மணிமுதல்
108 கலச சங்காபிஷேகம்—விசேட பூசை — அன்னதானம் நடைபெற்று— பிற்பகல் 5 மணி சகஸ்ரநாமார்ச்சனை — திருவூஞ்சலைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வெளி வீதி உலாவரும் அருட்காட்சியும் நடைபெறும்.
அடியார்கள் அனைவரும் வந்து கற்பக விநாயகர் அருள் பெறுக!

— தர்ம பரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு :
**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (70302)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நம்பிக்கைத் துரோகம்

அரசாங்கம் இனப்பிரச்சினையைக் கடந்த ஐந்து வருடகாலமாக ஏன் தீர்க்கவில்லை என்று கேட்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. நாடாளுமன்றத்தில் பேசுகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பியான பி.பி. தேவராஜ் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவியேற்றதில் இருந்து இன்று வரை இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமற் போய் விட்டது. அரசு பொருத்தமான மத்தியஸ்தம் எதனையும் அடையாளம் காணவில்லை. பாதை தெளிவாக இருக்கும் போது நியாயமான அடிப்படையில் சிந்திக்காமல் அரசு இப்படி வழி மாறிச் செயற்படுவது ஏன்?— என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

வெளிவிவகார அமைச்சர் 1995 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பேசுகையில் மூன்றாந் தரப்பின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணையுடன் விடுதலைப் புலிகளோடு பேசுவதற்குத் தயார் என்று பேசியதைச் சுட்டிக்காட்டி, இப்போது முரண்பாடாகக் கருத்துக் கூறி வருவதை அவர் கண்டித்தார்.

இவ்வாறு அரசாங்கத்தில் உள்ளவர்கள் நேரத்துக்கு நேரம் முரண்பாடாகப் பேசுவதால், நாட்டில் உள்ள தீவிர அரசியல் சக்திகளுக்கு மோசமான சமிக்ஞைகள் காட்டப்படுவதாகவும் முன்னாள் அமைச்சர் தேவராஜ் எடுத்துரைத்தார்.

அரசியல் என்பது நேரத்துக்கு நேரம் முரண்பாடான கொள்கைகளைக் கைக்கொள்வது தான்; போக்குகளை மாற்றுவது தான். ஆயினும் அரசாங்கம் ஒன்று நாட்டின் மிக முக்கியமான விவகாரத்தில் சணம் பித்தும் சணம் வாதம் என்று தனது நிலையை மாற்றிக் கொள்வதால் உண்டாகக் கூடிய பாதிப்புகள் அனந்தம். அதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்களே.

போர் இனப்பிரச்சினையின் விளைவே. போரிடும் இரண்டு தரப்புகளிலும் மட்டுமன்றி பொதுமக்களும் பெரும் எண்ணிக்கையில் இறக்கிறார்கள். தமிழ் மக்கள் அகதிகளாக்கப் படுகிறார்கள். இவை தெரிந்தும் அரசு இனப்பிரச்சினை விவகாரத்தில் உகந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்காததால் அதனைத் தீர்ப்பதில் படுதோல்வி அடைந்துள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்க அமைச்சர்களும் என்ன காரணத்தைச் சொன்னாலும், தங்கள் போக்கை நியாயப்படுத்த தலைகீழாக நின்றாலும் அவர்கள் திறந்த மனதுடனும் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட்டிருப்பின் இப்போதைய தோல்வியைத் தவிர்த்திருக்கலாம்.

மக்களைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு சமாதானத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையுடனேயே கடந்த தேர்தலில் அவர்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்து ஆட்சி பீடத்தில் ஏற்றினார்கள்.

ஆனால் மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்வது போல, அரசு செயற்பட்டதாலேயே இன்றைய நிலை தோன்றி உள்ளது; தோல்வி ஏற்பட்டுள்ளது. மத்தியஸ்தம் என்பது ஐக்கிய தேசியக் கட்சி போட்ட முட்டுக்கட்டை என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றது. அதுவே உரியவழி என்பதை அரசு ஏற்க மறுத்ததும் பொருத்தமற்றதே.

தான் பொறுப்பேற்ற பணியை அரசு சரிவரச் செய்யவில்லை என்ற அவப்பெயர் அதனை விட்டு நீங்காது!

# யுத்தச் சூழலும் நிம்மதியற்ற வாழ்வும் சிறுவர்களை மோசமாகப் பாதிக்கிறது

## அவர்களை வலுவடையச் செய்யும் அணுகுமுறை தேவை

யாழ்ப்பாணம், ஒக். 26

நீண்ட காலமாகத் தொடரும் யுத்தச் சூழ்நிலை, நிம்மதியற்ற வாழ்க்கை, பொருளாதார நலிவுகள் பெரியோர்களை விடச் சிறுவர்களையே கூடுதலாகப் பாதித்து வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்ற சிறுவர் நாடக விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமூக மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி சிவராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுவர் நாடக அரங்குத் தலைவர் தேவானந்த் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

உளரீதியில் பாதிப்புற்ற சிறுவர்கள் தமது உணர்வு வெளிப்பாட்டுக்களைப் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்துவார்கள். தாம் முன்னர் கைக்கொண்டு பின்னர் கைவிட்ட பழக்கங்களை மீண்டும் பின்பற்றுவார்கள்.

விரல் சூப்புதல், இரவில் நித்திரையில் சிறுநீர் கழித்தல் போன்ற செயற்பாடுகள் அவர்களின் உள வேறுபாட்டை எளிதில்புலப்படுத்துகின்றன.

இந்த வகையான சிறுவர்களை இனம் கண்டு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் உளப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை உளப்பலமுடையவர்களாக விளங்கச் செய்யலாம்.

தேவையற்ற விதத்தில் அவர்களுக்கு பயம் காட்டுதல் போன்றவை நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும். பெற்றோர் குறிப்பாகத்தாய்மார் இதில் கூடிய கவனம் செலுத்துவது அவசியம்.

சிறுவர்களின் உள ஆற்றல்களை மேம்படுத்தும் விதத்தில் கலைநிகழ்வுகளில் அவர்களுக்குக் கூடிய ஈடுபாட்டை ஏற்படுத்தலாம். இதன் மூலம் சிறுவர்களின் உளப்பாதிப்பிலிருந்து அவர்களை விடுவிக்க முடியும்.

### சிறுவர் நாடக அரங்கு

இவ்வகையில் சிறுவர் நாடக அரங்கத்தினரின் செயற்பாடு மிக அவசியமான ஒன்றாகும். இச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் சிறுவர் நாடக அரங்கத்தினர் குறிப்பாகக் குழந்தை ம. சண்முகலிங்கன் போன்றோரின் சேவைகள் போற்றத்தக்கன என்றார்.

குழந்தை ம. சண்முகலிங்கன் தமது உரையில் கூறியதாவது:-

இன்றைய சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எந்தளவுக்கு யுத்தக் கொடுமைகளால் உடல், உள பாதிப்புக்கு உட்படுகிறார்களோ அதனைவிட தென்னிந்திய சினிமாப்பட மோகத்தினால் சீரழிவது வேதனையுடன் நோக்கப்பட வேண்டிய ஒன்று.

அதுமட்டுமன்றி சிறுவர்களின் சிந்தனை அவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப அவர்கள் மத்தியில் சென்று உறவாடி அதற்கேற்ப போட்டிகள் நடத்தப்படவேண்டும்.

அவர்களின் பொருளாதார வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு அவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் வகையில் போட்டிகள் நடத்தப்படவேண்டும்.

### கிராமரீதியில் போட்டிகள் இடம்பெற வேண்டும்

வெறுமனே நகரத்தில் சிறுவர் போட்டிகளை நடத்துவதால் மட்டும் சிறுவர்களின் ஆற்றல்களை மேம்படுத்த முடியாது.

கிராமங்களுக்குச் சென்று கிராமிய சிறுவர்களின் உளத்தாக்கங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப அவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தப்படவேண்டும்

யாழ்ப்பாணத்தில் சிறுவர் அரங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். சிறுவர்களுக்கான அரங்கப் போட்டிகளை நடத்தக்கூடாது என்பது மூன்றாம் உலக நாடுகளிலே கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அடிப்படை விதி. ஆனால் இவ்விதிகளை மீற வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்—என்றார்.

'உம்மாண்டி' சிறுவர் நாடகம் மற்றும் ஓடிவிளையாடுபாப்பா' போன்ற குழுப் பாடல்களும் கலைநிகழ்வுகள், சிறுவர் தொடர்பான கட்டுரை, கவிதைப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

(இ–6)

## பழைய மாணவர் சங்கக் கிளைகள்

வலி தென்மேற்கு, ஒக், 26

யாழ். பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் கிளை நிறுவனங்களை வெளிமாவட்டங்களிலும் நிறுவுவதற்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் கலாநிதி எஸ். ஸ்ரீ. சற்குணராசா முடிவு செய்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வவுனியா மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் கிளை நிறுவனங்கள் உருவாக்கப்பட உள்ளன

இதன் மூலம் யாழ். பல்கலைக்கழகத்துடனான தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்பட உள்ளன.

(இ-8-185)

## நல்லின ஜமுனா பாரி ஆடுகள்

நெல்லியடி, ஒக். 26

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் நல்லின ஆடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

ஐ. நா அபிவிருதித் திட்ட நிறுவனத்தால் கொண்டுவரப்படவிருக்கும் ஜமுனா பாரி இன ஆடுகள் தேவையானோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விண்ணப்பிக்குமாறு, சங்கத் தலைவர் சாம்–செபஸ்ரியன் தெரிவித்துள்ளார்.

[இ-109]

## குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஒக். 26

யாழ். மாவட்டக் கமநல சேவைத் திணைக்களத்தினரால் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் ஏழு குளங்களும் வடமராட்சியில் ஐந்து குளங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் மாதாவிற்குளம், இடிகிடங்குக் குளம், இல்லாரைக் குளம், கிராய்க்குளம், கூளிக்கிராய்க் குளம், திம்பிரிவில் குளம். பெரிய ருவாளிக் குளம் என்பனவும் —

வடமராட்சியில் ஆணை விழுந்தான்குளம், தலைவாழைக்குளம், சோனப்புக் குளம், கற்கிராய்க் குளம், மாக்கிராயன் குளம் என்பனவும் — புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் யாழ். மாவட்டத்தில் ஆறு விவசாய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

நல்லூர்ப் பிரதேச சபைப் பிரிவில் உள்ள யமுனா ஏரி வாய்க்கால், நந்தாவில் வாய்க்கால் என்பனவும் —

சாவகச்சேரிப் பிரதேச சபைப்பிரிவில் உள்ள கேலங்குளம், கரவெட்டிப் பிரதேச சபைப் பிரிவிலுள்ள கட்டைக் காட்டுக் குளம், மாது குளம் என்பனவும் —

உடுவில் பிரதேச சபைப் பிரிவில் உள்ள உடுவில் பெரிய குளக்கிணறு, சண்டிலிப்பாய்ப் பிரதேச சபைப்பிரிவில் உள்ள மருகுளக்கிணறு, வேலணைப் பிரதேச சபைப்பிரிவில் உள்ள மண்கும்பான் வாய்க்கால், பளைப் பிரதேச சபைப் பிரிவிலுள்ள ஆமைப்பள்ளக்குளம் ஆகிய ஒன்பது நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன.

புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட அனைத்து மக்களுக்கும் அரிசி, பருப்பு, சீனி, ரின்மீன் போன்ற பொருள்களைக் கமநல சேவைகள் திணைக்களம் வழங்கியது.

[இ-8-152]

# கிராமிய அமைப்புக்களை உருவாக்கி மக்களுக்கு உதவுவதே குறிக்கோள்

## பெண்கள் விடுதி திறப்பு விழா வைபவத்தில் உரை

நெல்லியடி, ஒக். 26

வடமாகாணத்தில் பருத்தித்துறை, சங்கானை, காரை நகர் போன்ற இடங்களில் கிராமிய அமைப்புகளை உருவாக்கி பொது மக்கள் மூலமாக பொது வேலைத் திட்டங்களை ஏற்படுத்துவது எமது கடமையாகும்.

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையில் புனரமைப்புச் செய்யப்பட்ட பெண்கள் விடுதியைத் திறந்து வைத்துப் பேசிய போரூட் நிறுவன திட்ட இணைப்பாளர் கே.கோகுலதாஸன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தலைமையில் திறப்புவிழா வைபவம் நடைபெற்றது. சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் இந்த புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

போரூட் நிறுவன திட்ட இணைப்பாளர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

நாம் 1998 ஆம் ஆண்டில் ஆதிகோவிலடிப் பகுதியில் கால் ஊன்றினோம். அதன் பின்னர் பொலிகண்டி, சக்கோட்டை, தொண்டமானாறுப் பகுதிகளில் எமது திட்டங்களை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளோம்.

வல்வெட்டித்துறைமாவட்ட மருத்துவமனையில் நாம் மேற்கொண்ட பெண்கள் விடுதி புனரமைப்புத் திட்டம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்ற வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாளும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரும் எமக்குப் பெரும் உதவிகளை வழங்கியிருந்தனர்.

எமது நிறுவனத்தின் கீழுள்ள 38பாலர்பாடசாலைகளில் 34 பாலர் பாடசாலைகள் மக்களால் இயக்கப்பட்டு வருகின்றன. மக்களுடைய வளங்களை அணிதிரட்டி மக்களை திட்டமிடச் செய்து அவர்களுக்கு வழிகாட்டுவதே போரூட் நிறுவனத்தின் முக்கிய கடமை ஆகும்.

மந்திகை மருத்துவமனைக்கு இரண்டு குழாய்க் கிணறுகளை அமைத்தோம். அங்கு குளறுபடி இருக்கின்றது. வைத்தியசாலை அபிவிருத்திச்சபையும் உற்சாகமாக இருக்கவில்லை. இதனால் அங்கு தொடரப்பட்ட எமது வேலைத்திட்டம், கைவிடப்பட்டது —என்றார்

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தனது உரையில் விடாமுயற்சியும் ஒற்றுமையும் இருந்தால் பல விடயங்களை சாதிக்கலாம்.

வைத்தியசாலையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரச சார்பற்ற நிறுவனமாகிய போரூட் தனது பங்களிப்பை நல்கியமை வைத்தியசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப் படவேண்டியதாகும்என்றார்

திறப்புவிழா வைபவத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசாமி, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம். மகேந்திரம், டாக்டர் கே. போககுரு, வைத்தியசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் கே. குணநாயகம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள். வைத்தியசாலை மேற்பார்வையாளர் சி.சுப்பிரமணியம் நன்றியுரை கூறினார்.

இவ் வைபவத்தின் போது வல்வெட்டித்துறை கலாரஞ்சிதா வர்த்தகநிலைய உரிமையாளர் கே. தவராசாவினால் சுவர் மணிக்கூடு ஒன்று மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

(இ–109)

## நாளை

ஐப்பசி 10

புதன்கிழமை

திதி: திருதியை

முன் இரவு 08.58 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

முற்பகல் 11.30 வரை

ஜயநேரம்: 4.30–6.03

ராகுகாலம்: 12.03–1.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எப்போதும் உண்மையை மறையாது சொல்லுகின்ற மனத்திண்மை வேண்டும்.

— காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (இம்மாதம் 20 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

ஊர்காவற்றுறை

(11098ஏ), (11098பி), (11098சி), (11098டி), (12006ஏ), (12006பி), (12024ஏ), (12159ஏ), (12139பி). (12139டீ), (12165ஏ), (12165பி), (12165டீ), (12165ஈ), (12197ஏ), (12197பி), (12218ஏ), (12225ஏ), (12225பி), (12226ஏ).

கோப்பாய்

(109733ஏ), (109733பி) (116500 ஏ), (116500பி), (116576ஏ), (116580ஏ), (116642ஏ), (116642பி), (116651ஏ), [116696ஏ]. [116715ஏ[, [116715பி], [116715சி], [116723ஏ], [116746ஏ], [116746பி], [116753ஏ], [116757ஏ], [116757பி], [116757சி], [116763ஏ], [116763பி], [116765ஏ], [116768ஏ], [116768பி[, [116770ஏ], [116914ஏ[, [116914பி], [116914சி], [116932ஏ], (116946ஏ], [116947ஏ], [116949ஏ], [116950ஏ] [116953ஏ], ]116953பி], [119563ஏ], [119563பி], [119563சி], [119563டீ], [119642ஏ[, [119661ஏ], ]119661பி], [119674ஏ], [119674பி], [121112ஏ], [121112பி], [121118ஏ], [121118பி], [121126ஏ], [121126பி], [121126சி], [121132ஏ], [121132பி], [121132சி], [121151ஏ], [12115'பி], [121153ஏ], [121159ஏ], [121160ஏ], [121166ஏ], (121173ஏ), (121198ஏ). (121198பி). (121198சி), (121202ஏ), (12 222ஏ), ]123133 ஏ), [123133பி), ]123179 ஏ], [123180 ஏ), [123180 பி ), ]123185 ஏ), 123185 பி[, (123186 ஏ[. (123186 பி(, (123186 சி), (123186 டீ[. (123187 ஏ), (123187 பி[, (123187 சி), (123187 டீ), (123197 ஏ), (123204 ஏ), (123204 பி), (123204 சி),

(123205 ஏ), (123205 பி), (123207 ஏ), (123207 பி), (123212 ஏ), (123213 ஏ), (123222 ஏ), (123222 பி), (123230 ஏ). (120361 ஏ), [120361 பி[, [122465 ஏ),

மருதங்கேணி

(116471ஏ), (116471பி), (121877ஏ), (121877பி), (121877சி), 111888ஏ), (118998ஏ),

நல்லூர்

(104351ஏ), [104356ஏ), (104382ஏ), (109819ஏ), (109894ஏ), (109928ஏ), (109935ஏ), (109936ஏ), (110126ஏ). (110237ஏ), [110470ஏ[. [117501ஏ]. [117502ஏ]. [117504ஏ]. [117508ஏ], [117511ஏ[, [117513ஏ], [117514ஏ], [117515ஏ], [117517ஏ], [117520ஏ[, [117524ஏ[, (117555ஏ[, [117558ஏ]. [117560ஏ], [117566ஏ], [117567ஏ).

(117569ஏ), (117570ஏ), (117570பி), (117653ஏ), (117681ஏ), (117697ஏ), (117699ஏ), (117700ஏ}, (117714ஏ), (119603ஏ), (122999ஏ), (123000ஏ), (123000பி), (123004ஏ), (123006ஏ),

(123006பி). (123007ஏ, (123007பி), (123007சி), (124008ஏ), (123009ஏ), (123009பி), (123017ஏ), (123024ஏ), (123069ஏ), (123069பி), (123126ஏ), (123126பி).

(123176ஏ), (123182ஏ), (123189ஏ), (123190ஏ), (123201ஏ), (123210ஏ), (123229ஏ), (123235ஏ), (123236ஏ), (123236பி), (120421ஏ), (120421பி), (120487ஏ), (120487பி), (120487சி), (120523ஏ). (120533ஏ), (120533பி), (120556ஏ), (120633ஏ), (120633பி), (122404ஏ), (122423ஏ), (122423பி), (122428ஏ), (122428பி), (122428சி), (122446ஏ), (122446பி),

(122446சி), (122495ஏ), [122495பி), (122560ஏ). (122560பி), [122583ஏ], (122672ஏ), [122672பி]. 122778ஏ]. (122801ஏ), [122811ஏ], [117247ஏ], (117247பி), [117247சி), [117374]ஏ.

(117374பி), (11374சி), [117374டி], (117374ஈ), (117374எவ்], (119456ஏ), [121340ஏ], [121378ஏ]. [121538ஏ), (121538பி], [121649பி], [121652ஏ], (121672ஏ]. [121672பி], (121724ஏ). (121724பி), (121748ஏ). (121748பி), [121749ஏ), (121769ஏ), (121769பி), (121769சி), [121795ஏ). (121808ஏ], (121822ஏ]. (121822பி), [121822சி], (121843ஏ]' (121843பி). [121488ஏ], (121848பி], (121850ஏ], (123351ஏ). (121850பி),

[123351பி], (123351சி], (123351டி), (123351ஈ), [123351எவ்]. [123351ஜி), (123396ஏ), [123396பி]. [123476ஏ, (123517ஏ). (123563ஏ],

பளை

[121883ஏ], [121887ஏ]. [121887பி]. [121889ஏ], [121891ஏ], [121893ஏ[, [123692ஏ], [123692பி].

பருத்தித்துறை

[093864ஏ], [101159ஏ], [101159பி], ]101159சி]. [108061ஏ], [108217ஏ], [111291ஏ], [111302ஏ], [111310ஏ], (111310பி], [111338ஏ], [111358ஏ], [111358பி], [111358சி], [111362ஏ].

[111442ஏ], [111449ஏ]. [111475ஏ], [111475பி], [111475சி], [111475டி], [111476ஏ] [111476பி], [111497ஏ], [111504ஏ], [111520ஏ]. [111544ஏ[. [111553ஏ], [111553பி], [111475ஈ].

[111588ஏ], [111601ஏ], [111607ஏ]. [111623ஏ], (111639ஏ], [111671ஏ], [111671பி], [111676ஏ], [111676பி], [113310சி]. [113322ஏ]. [113351ஏ]. [113351பி], [113352ஏ]. [113366ஏ]. [113422ஏ].

[113422பி]. [113456ஏ], [113483ஏ], [113483பி], [113483சி], [113483டி], [113517ஏ]. [173517பி], [113583ஏ], [113583பி], [118597ஏ]. [113597பி], [113616ஏ]. [113641ஏ]. [113641பி],. [1136 0ஏ].

[115261ஏ], [115557ஏ], [115557பி]. [115557சி], [118734ஏ]. [118795ஏ], [118795பி], [[118851ஏ],

(தொடரும்)

---

## ஓடி மறைந்தது ஒரு வருடம்



### திருமதி எம். எம். மரியநாயகம்
(அற்புதமலர்)

கோவில் வீதி (ரெம்பிர் றோட்)· யாழ்ப்பாணம்.

'மம்மி' இல்லாத மாதங்கள் பன்னிரண்டு
மனதினில் எமக்கு நீ மறையாத குலவிளக்கு
ஓடி மறைந்தது ஒரு வருடம் ஆனாலும்
நீ இல்லாத வினாடியும் விடியாத வருடமதான்
அழுது புரண்டாலும், அக்கா நீ வருவாயா?
மறை உண்மை என்றாலும் மறக்க முடியவில்லையே
'மம்மி' என்றுன்னை மனதாரக் கூப்பிட்டோம்
மன உறுதிச்சிகரம் நீ, மனங்களிலே வாழ்கின்றாய்
சொந்த மண்ணைப் பிரிந்து நாம் வந்திங்கு
கோவில் வீதியதன் குளுமைகளை அசைபோட
'மம்மி' உந்தன் கம்பீர ராஜநடை
கோவில் வீதியின் கற்றாணும் கதை சொல்லும்
வானதூதர் மத்தியில் நீயும் "அப்பாவும்"
வல்ல தேவனின் தரிசனமும் கண்டிடுவீர்
மறை விசுவாசம் மனதிலே நாம் நிறுத்தி
மறு உலகில் மீண்டும் நாம் சந்திப்போம் சந்திப்போம்.

அன்புச் சகோதரி
நவமலர், பிள்ளைகள்.

65/4, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை,
கொழும்பு - 8.

(70325)

---

## பௌதிக வளம் பற்றாக் குறை

கோப்பாய், ஒக். 26

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பெருமளவில் பௌதிக வளப்பற்றாக் குறை நிலவி வருகின்றது என பாடசாலை நலன் விரும்பிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெருமளவு மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற போதிலும் மனையியல் அறை சங்கீத அறை, நடன அறை, ஆசிரியர் இளைப்பாறும் அறை மற்றும் மலசலகூட வசதிகள் இங்கு இன்மையினால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள் எனவும்—

மழை காலம் நெருங்கி விட்ட இக்காலப் பகுதியில் மழைநீர் பாடசாலை வளாகத்துள்மட்டு மல்லாது வகுப்பறைகளுள்ளும் உட்செல்வதால் பெரும் துயரை இத்தப் பாடசாலை அனுபவித்து வருவதாகவும்—

பாடசாலை நலன் விரும்பிகள் மிகுந்த ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளனர்.

[இ-8-72]

## இலவச மருத்துவ பரிசோதனை

வலி. கிழக்கு, ஒக். 26

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இருபாலைப் பகுதி மக்களுக்கு இருபாலை சி. சி. த. க. பாடசாலையில் கடந்த மாதம் மருத்துவ பரிசோதனை நடைபெற்றது.

மேற்படி மருத்துவ பரிசோதனையின் முடிவில் 90 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும், 120 மாணவர்களுக்கு இலவசமாக பற்பசை, தூரிகைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட வலயத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜாவும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் பங்குபற்றினர்.

(இ-[illegible]80)

---

## தவறிவிட்டது

செல்வி விஷ்ணுஸ்ரீ பூபாலசிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல. 766790712V) விசேட அடையாள அட்டையும் (இல.0903001211) 17 - 10 - 99 இல் தவறிவிட்டன.

தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். (70329)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்திய அஸ்தி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சின்னத்தம்பி தங்கராஜா

பிறப்பு 04-01-1923 — இறப்பு 26-09-1999

எங்கள் பாசமிகு தந்தையே!
தங்கள் பாசத்தினையும் பரிவையும் பாசத்துடன் தேடுகின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு உதவி செய்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகள். (27-10-1999) நாளை காலை 8 00 மணியளவில் நடைபெறவுள்ள சபிண்டீகரண கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

கிரிப்பல்லி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/9512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

# கான்பூரில் இந்திய அணியிடம் மண்கவ்வியது நியூஸிலாந்து!

கான்பூர், ஒக். 26

இந்திய — நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே கான்பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நேற்று நான்காம் நாள் ஆட்டத்துடனேயே இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் நேற்றுக் காலை இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 155 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய அணியின் பந்து வீச்சில் அனில் கும்ப்ளே 6 விக்கெட்டுகளையும் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும் சுனில் ஜோசி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

82 ஓட்டங்களைப் பெற்றால் ஆட்டத்தில் வெற்றியீட்டலாம் என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 18 2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப்பெற்றது. சச்சின் டெண்டுல்கர் 9 பவுண்டறிகள் அடங்கிய 44 ஓட்டங்களையும் டெவன்காந்தி 31 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் ஆட்டநாயகனாக — இரண்டு இன்னிங்ஸிலுமாக மொத்தம் 10 விக்கெட்டுக்களை கைப்பற்றிய— இந்திய சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே தெரிவு செய்யப்பட்டார்.

ஓட்ட விவரம் வருமாறு:-

நியூஸிலாந்து:-256 மற்றும் 155 ஓட்டங்கள்.

இந்தியா:- 330 மற்றும் இரண்டு விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்கள்.

இந்திய அணி இந்த வெற்றி மூலம் மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இந்தத் தொடரின் மூன்றாவதும் கடைசியுமான ஆட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நடைபெறும். (உ-4-8)

## உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 26

சென். ஜோன்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தின் முன்னணி விளையாட்டுக் கழகங்களான பொற்பதி, காந்திஜீ, வீனஸ், கிறீன்பீல்ட் யுத்காமல், சென். நீக்கிளாஸ், வளர்மதி, அரியாலை ஐ.வி.க கோண்டாவில் மத்தி, கிறீன் கிங்ஸ், சென் மைக்கல்ஸ், பாரதி, சென் மேரிஸ், றோயல், கலைவாணி, பாடுமீன், சென் றேக்ஸ், சென். அன்ரனீஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழகம் ஆகியவை பங்குபற்ற உள்ளன.

இச்சுற்றுப்போட்டியில் சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கேடயத்துடன் 5 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 3 ஆயிரம் ரொக்கப் பணமும் மூன்றாம் இடம் பெறும் அணிக்கு ஆயிரம் ரூபாவும் இறுதி ஆட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிறந்த வீரருக்கு உதைபந்தாட்டக் காலணியும் வழங்கப்பட உள்ளன. [உ-8-51]

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, ஒக். 26

16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று — சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் — சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே சென் ஹென்றீஸ் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறும். (உ86-8)

## மிட்சுஇ-ஜெசீபா வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக. 26

மிட்சுஇ—ஜெசீபா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் வெகு விரைவில் யாழ் நகரில் ஆரம்பமாக உள்ளன.

யாழ். மாவட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி முகாமில் பங்குபற்றிய 20 வீரர்களையும் இன்று செவ்வாய் மாலை 5-00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் சமுகமளித்து மாவட்டப் பயிற்றுநர் வி. கே. சண்முகலிங்கத்தைச் சந்திக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் கேட்டுள்ளது. (இ)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக் 26

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் — 7 பேர் பங்குபற்றும் — 12 ஓவர்கள் கொண்ட — "பரா" வெற்றிக் கேடயத்திற்கான — மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி தற்போது இறுதி நிலையை நெருங்கியுள்ளது.

நடைபெற்றுவரும் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் இன்று செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டத்தில் சித்திவிநாயகர் வி. க. அணி கொக்குவில் ஸி ஸி. ஸி. அணியை எதிர்த்து விளையாடும். (உ-8)

SCIENCE COLLEGE JAFFNA
2000 A/L PHYSICS
மின்புலம் -- புதன் 3 -- 5 P. M.
வெப்பவியல் -- வெள்ளி 6. 30 --- 7. 30 A. M.
திரு. த சம்பந்தன் B. Sc.
(70334)

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?
நீங்களும் பட்டதாரியாகலாம்.
யாழ்., பேராதனை, கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப் பாட நெறிகளான
G. A. Q. First in Commerce
G. S. Q. B. BA.
விரிவுரைகள் 30-10-99 இல் ஆரம்பமாகின்றன.
உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)
(70340)

## மிதிவெடிகள் அதிகம் உள்ள இடங்களில் பாதுகாப்பு வேலி

யாழ்ப்பாணம், ஒக். 26

குடாநாட்டில் மிதிவெடிகள் அடர்த்தியாகக் காணப்படும் பகுதிகளைச்சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் நடவடிக்கைகளில் ஐ நா. அபிவிருத்தித்திட்ட மிதிவெடியகற்றும் செயற்பாட்டுப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மிதிவெடிகளைக் கண்டுபிடிப்பது தொடர்பாக சமூக கணிப்பீடு செய்துவரும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட உள்ளூர் உத்தியோகத்தர்கள் மூலம் மிதிவெடி அடர்த்தியாக இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியில் 11 உள்ளூர் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ-5)

## இளைஞர் சேவை மன்றத்தின் ஐந்து வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 26

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய சிரம அணி வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஐந்து அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களுக்கென தேசிய இளைஞர் சேவைகள மன்றத்தின் தலைமைச் செயலகத்தினால் 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரணி கொடிக்காடு விவசாய வீதி திருத்தம், கரணவாய் வெற்றிக்காட்டுப் பிள்ளையார் கோயில் குள புனரமைப்பு, சங்கானை மண்டிகை குள வாய்க்கால் திருத்தம், அளவெட்டி குருவல விவசாய வீதி புனரமைப்பு, ஊர்காவற்றுறை மணியம் குளம் வாய்க்கால் புனரமைப்பு போன்ற திட்டங்களுக்கும். நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த வேலைகள் யாவும் அவ்வப்பகுதி இளைஞர் கழகங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [ஐ-5]

## வீடுகளை மீளத் தரக் கோரி ஆளுநருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக். 26

கடந்த நான்கு வருடங்களாக படையினர் வசமிருக்கும் தமது வீடுகளை விடுவிக்குமாறு கோரி அச்செழு இடம்பெயர்ந்த கிராமவாசிகள் சங்கத்தைச் சேர்ந்த 48 பேர் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இது தொடர்பான மகஜரொன்றினையும் அவர்கள் ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் எமது வீடுகள் கடந்த நான்கு வருடங்களாக படையினர் வசமிருக்கிறது.

எமது வீடுகள் படையினர் வசமிருக்கும்பொழுது நாம் இடம்பெயர்ந்து வாடகை வீடுகளில் தங்கியிருந்துமாதா மாதம் வாடகைப் பணத்தை செலுத்தி வருகிறோம் என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வடபிராந்திய படைகளின் தளபதி, அச்செழு இராணுவ முகாம் பிரிகேடியர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-5)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர், ஒக் 26

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் (ஐ-73)

## சீ-நோர் ஊழியர்கள் 23 பேர் தென்பகுதிக்கு உடனடியாக மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 26

குருநகர் சீ—நோர் வலைத் தொழிற்சாலையில் கடமையாற்றிய 23 ஊழியர்களுக்கு தென்பகுதியில் கடமையாற்றுவதற்கான இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

லுணுவிலவிலுள்ள சீ-நோர் வலைத் தொழிற்சாலை, மட்டக்குளி படகு நிர்மாண நிலையம் போன்றவற்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இவர்கள் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் இவர்களுக்கான இடமாற்றக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சீ—நோர் வலைத் தொழிற்சாலையின் கொழும்பு தலைமைச் செயலகத்தினாலேயே இந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்டிருந்த இத் தொழிற்சாலையில் கடமையாற்றியவர்களில் 161 ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டு 1991 ஓகஸ்ட் 5 ஆம் திகதி வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

நஷ்டஈடு வழங்கப்படாமல் இருந்தவர்களில் மூன்று ஊழியர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 23 ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ 5)

## 11 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஒக். 26

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயாத்திலிருந்துதோற்றிய மாணவர்களில் பதினொரு பேர் சித்தி [illegible] யனில் 8பேர் என வெளி வந்தது தவறாகும். [அ]

## காரைநகரில் பனம்விதை நடுகை

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் காரைநகர் போருட் திட்டத்தின் உதவியுடன் 25 ஆயிரம் பனை விதைகள் நடுகைசெய்யப்பட உள்ளன.

இதன் முதற் கட்டமாக காரைநகர் சாம்பலோடைப் பகுதியில் 8 ஆயிரம் பனை விதைகள் கடந்த ஞாயிறன்று நடப்பட்டன.

யாழ்ப்பாண போருட் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் நா. கோகுலதரஸ் பனைவிதை நடுகையை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். [ஐ-73]

## சமய சந்நிதிகளில்

தென்புலோலி மந்திகை அம்மன் கோயில் கண்ணகை மணவாளக்கோலசங்காபிஷேகமும், ஏகதினஇலட்சநாம அர்ச்சனையும் நாளை மறுதினம் நடைபெறும்.

சங்காபிஷேகத்தையும், அர்ச்சனையையும் தென்புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீசிவகுஞ்சிதபாதக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து நடத்தி வைப்பார், (ஐ-173-15)

* ★ ★

சாவகச்சேரி செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தை ஒட்டிய மண்டல பூர்த்தி சங்காபிஷேகம் இன்று காலை முதல் நடைபெறும். [ஐ-173]

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மண்டலாபிஷேக நிகழ்வில் இன்று மாலை 6 மணிக்கு யாழ் நாச்சிமார் கோயலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் 'வள்ளி திருமணம்' வில்லிசை இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் அகதி முகாமில் குடிசை வசதியின்றி அவதி

யாழ்ப்பாணம், ஒக். 26

மல்லாகத்தில் அமைந்துள்ள நீதிவான் நலன்புரி முகாமில் 14 குடும்பங்கள் குடிசை வசதி எதுவுமின்றிப் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன.

இந்த முகாமில் மயிலிட்டி, மாதகல் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 94 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களில் 80 குடும்பங்களுக்குத் தற்காலிக குடிசைகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

14 குடும்பங்களும் குடிசை வசதியின்றி அங்குள்ள உறவினர்களின் குடிசைகளிலும் மர நிழல்களின் கீழும் வாழ்ந்து வருகின்றன.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் என். கே. ஒபடகே அரச அதிகாரிகள் சகிதம் இந்த முகாமிற்கு விஜயம் செய்து இங்கு உள்ள அகதிகளின்குறைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார். (ஐ-5)

## தென்னையால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக். 26

தென்னை மரத்தில் ஏறிய ஒருவர் கீழே விழுந்து காயமடைந்தார்.

சுன்னாகம் றொட்டி ஆலடிப் பகுதியில் இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுவில் கிழக்கைச் சேர்ந்த இளைய தம்பி கனகரத்தினம் [வயது - 33] என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ-15]

சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை

குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த

**விற்றுத் தீர்த்தல்**

இன்றே முந்துங்கள் இன்னும் சில தினங்கள் மட்டுமே

**சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ்**

73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(சி/9409)

**வைத்தியசேவை**

சகல விதமான நோய்களுக்கும்

டாக்டர் K. S. பரஞ்சோதிநாதர்

D. A. M., R. I. M. P. (Cey.), A. M. P., P. I. M. M. S. H. C., M. H. H., M. H. D. I. (Ind.)

இதுவரை காலமும் கொழும்பில் நடைபெற்றுவந்த வைத்திய சேவைகள் அனைத்தும் கீழ்வரும் முகவரியில் 19-10-99 இல் இருந்து நடைபெறுகின்றன.

**PARAMSOTHY Medical Clinic**

குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.

குறிப்பு:- விரைவில் வட்டுக்கோட்டையிலும் யாழ். நகரிலும் எமது சேவைகள் ஆரம்பமாகவுள்ளன.

(70299)

**சங்கமம் ரெக்ஸ்**

மழைத்துளி மழைத்துளி
மண்ணில் சங்கமம்
பனித்துளி பனித்துளி
மண்ணில் சங்கமம்
புதுவித புடவைத் தினுசுகள்
சங்கமம்! சங்கமம்!!

**சங்கமம் ரெக்ஸில் சங்கமம்**

இறக்குமதி செய்யப்பட்ட றெடிமேட் ஆடைகளின் பிரத்தியேக காட்சியறை

**(சங்கமம் ரெக்ஸ்)**

ஜனரஞ்சகமான ஜவுளிமாளிகை

54A, நவீன சந்தை, (உட்புறம்)

யாழ்ப்பாணம்.

[சி/9489]

## குருநாகலில் மின்மாற்றி தகர்ப்பு

குருநாகல் — வெள்ளவாய பகுதியில் உள்ள மின்மாற்றி ஒன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் - குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கண்டித்து நாளை அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ள வேளையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. [ஐ-7]

### நகரிலும:

(முதலாம் பக்கத் தொடர்)

அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சற்குணம் ரஜீந்திரன் [வயது 23) ஆகிய இளைஞர்கள் நேற்றுப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டிப் பகுதியில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் சுன்னாகம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-5-4-9)

### பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்)

(இந்த மாணவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்ட விடயம் உடனடியாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உரிய நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அவர் இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது. (உ-7)

### பொது...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ளது.

பேச்சுவார்த்தைகளில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் ஏனைய அமைப்புக்கள் இணக்கத்துக்கு வராத பட்சத்தில் ரெலோ அமைப்பு தனித்து ஒருவரைத் தேர்தலில்நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7-164)

### வாசுதேவ...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருப்போரின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் —

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும் —

சிங்கள பூமிபுத்ர கட்சி சார்பில் ஹரிச்சந்திரா டி. விஜயசூரியவும்—

மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தினேஷ் குணவர்த்தனவும்—

ஜே. வி. பி. மற்றும் இடதுசாரிகள் சார்பில் நந்தன குணதிலகவும்—

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருப்பது தெரிந்ததே. (ஐ-7)

உறுகொடவத்தவில் இருந்து செல்லும்

# மசகு எண்ணெய்க் குழாயில் திடீரெனப் பெரும் வெடிப்பு!

கொழும்பு, ஒக். 26

உறுகொடவத்த ரயில் பாதை ஊடாகச் செல்லும் மசகு எண்ணெய்க் குழாயில் நேற்றுக்காலை பெரும் வெடிப்பு ஏற்பட்டது. இதனால் ஆயிரக் கணக்கான லீற்றர் மசகு எண்ணெய் வெளியே சிந்தி நாசமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எண்ணெய்க் குழாயின் மூன்று இடங்களில் வெடிப்பு ஏற்பட்டது இதனால் குழாயில் இருந்து எண்ணெய் வெளியேற ஆரம்பித்தது. அருகில் இருந்த மக்கள் வெளியேறிய எண்ணெயைச் சேகரித்தனர்.

இந்த எண்ணெய்க் குழாய்கள் மிகவும் பழையவை எனவும் —

அதனாலேயே வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் - பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வெடிப்புக்கு நாசவேலை காரணமாக இருக்குமா என்பது குறித்து வெல்லம்பிட்டிய பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ-6-7)

# முகாமைத்துவ வர்த்தகபீட பரீட்சை முறையில் மாற்றம்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தகப்பீட மாணவர்களுக்கான பரீட்சை முறையில் புதிய மாற்றங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

புதிய கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்வேளை இந்தப் புதிய மாற்றங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்படும் எனவும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் குறித்த பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வருடந்தோறும் ஒவ்வொரு பாடமும் 60 பாட வேளைகளில் கற்பிக்கப்பட்டு வந்தது. தற்போதைய புதிய திட்டத்தின் கீழ் 30 பாட வேளைகள் விரிவுரை வகுப்புக்களாகவும் 30 பாடவேளைகள் கட்டுரை வகுப்புக்களாகவும் நடத்தப்படும்.

கட்டுரை வகுப்புக்களின் போது ஒவ்வொரு மாணவர்களினதும் கல்விச் செயற்பாடுகள் உடனுக்குடன் கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குப் புள்ளிகள் இடப்படும்.

அதேபோல விரிவுரை வகுப்புக்களில் போதிக்கப்படும் பாட அறிவைப் பரிசோதிப்பதற்கென நான்கு மாதங்களுக்கு ஒரு முறை பரீட்சை நடத்தப்படும் எனவும் பீடாதிபதி தெரிவித்தார்.

இந்த நடைமுறை நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-7-10)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் குமார் பொன்னம்பலம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு வேட்பாளராக குமார் பொன்னம்பலத்தை நிறுத்த கொழும்புத் தமிழ் வட்டாரங்கள் முயற்சி எடுத்து வருகின்றன. அதே வேளை பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்தி அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் சிலவும் முயற்சித்து வருகின்றன. எனினும் இந்தத் தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய சில தரப்பினர் காத்திருப்பதாகத் தெரிகிறது.

''தமிழ் ஈழவரின் விருப்பு வெறுப்பு என்ன என்பதை அறியாமல் தேர்தலில்போட்டியிடுவதுஇல்லை'' என்றுகுமார் பொன்னம்பலம் கூறியிருப்பது மறைமுகமாக இதனையே சுட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

புலிகள் தரப்பு நிலைப்பாடு என்ன என்பது தெரியவந்தால் தேர்தலில் குமார் பொன்னம்பலம் போட்டியிடக்கூடும் என அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தேர்தலில் தமிழர்கள் தமிழரையே ஆதரிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு சில தமிழ்க்கட்சிகள் தமிழர்களின் முதுகில் குத்தும் நடவடிக்கைகளில் மறைமுகமாக ஈடுபட்டிருப்பதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் கவலை வெளியிட்டன. (ஐ)

## விபத்தில் மாணவி காயம்

மந்திகை மடத்தடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்தார். மினிபஸ் வீதியை விட்டு விலகி வேலி ஒன்றுடன் மோதியதனால் முன்புறம் சேதமானது.

மாலி சந்தியைச் சேர்ந்த புவனேஸ்வரன் - மகாலக்சுமி (வயது 15) என்னும் பாடசாலை மாணவியே படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறையை நோக்கி வந்த மினிபஸ்ஸே விபத்துக்கு இலக்கானது. (ஐ-109)

### நாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

யுத்த பிரதேசங்களில் பணிபுரிய மருத்துவர்கள் எக்காரணம் கொண்டும் நிர்ப்பந்திக்கப்படக்கூடாது

ஆகிய பிரதான கோரிக்கைகள் உட்பட ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலைநிறுத்தம் நடத்தப்படுவதாக மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

தீபாவளி! தீபாவளி!!

உங்கள் ஜவுளித் தெரிவுகள் யாவும்......

பண்டிகைக்கால விஷேட விலையில்

**காவேரி சில்க்ஸ்**

48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9498)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் 26 10 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது